கனம் முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருமங்கலம்.
முன்னிலை : திரு. E.மணிகண்டன், B.A., B.L.,
முதன்மை மாவட்ட உரிமையில் நீதிபதி,
திருமங்கலம்.

2026ம் வருடம் ஜூலை மாதம் 08ம் தேதி புதன்கிழமை
இடைநிலை மனு எண்.3/2026
இன்
அசல் வழக்கு எண்.199/2023
* * * *

செல்வக்குமார் ... மனுதாரர்/வாதி

/எதிர்/

1) கண்ணுச்சாமி
2) பாப்பு
3) முரளி
4) மாயாண்டி
5) விருமாண்டி
6) தமிழ்செல்வி
7) ஜெயராஜ் ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இறுதியாக இம்மனு 03.07.2026ல் இந்நீதிமன்றத்தில் இறுதி விசாரணைக்காக வந்த போது மனுதாரர்/வாதி தரப்பு வழக்கறிஞர் திரு.N.நமசிவாயம் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் ஒருதலைபட்சமாக்கப்பட்டும் இருந்த நிலையில், மனு மற்றும் வழக்காவணங்களை பரிசீலனை செய்து இந்நீதிமன்றம் இன்று திறந்த நீதிமன்றத்தில் பிறப்பிக்கும்...

**<u>உத்தரவு</u>**

மனுதாரர்/வாதி தரப்பில் மேற்படி மனுவில் குறிப்பிட்டுள்ள ஆவணங்களை சாத்தங்குடி பிட்.2 கிராம நிர்வாக அலுவலர் அவர்கள் மூலமாக சமூகம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்து அவரை விசாரணை செய்யக்கோரி கட்டளை 75 மற்றும் 151 cpc படி இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>தீர்மானிக்க வேண்டிய விசயம்</u>** :

4. மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த மனு நிலைக்கத்தக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

**<u>தீர்வு</u> :**

5. இம்மனுவானது மேற்படி மனுவில் குறிப்பிட்டுள்ள ஆவணங்களை சாத்தங்குடி பிட்.2 கிராம நிர்வாக அலுவலர் அவர்கள் மூலமாக சமூகம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்து அவரை விசாரணை செய்ய உத்தரவிட வேண்டி இம்மனு கட்டளை 75 மற்றும் 151 cpc படி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

6. இந்நிலையில், மேற்படி உரிமையியல் நடைமுறை சட்ட விதி 75ன் கீழ் நீதிமன்றம் மூலம் ஆவணங்கள் வரவழைப்பதற்கு முன்பாக மேற்படி ஆவணங்களை பெறுவதற்கு சட்டப்படியான வழிமுறைகளை மேற்கொண்டும், சட்ட விதிமுறைகளை பின்பற்றியும் மேற்படி விதி 75ன் கீழ் மனு தாக்கல் செய்ய வேண்டியது சட்டப்படியானது ஆகும்.

7. மேலும், மேற்படி மனுவில் குறிப்பிட்டுள்ள ஆவணங்களை கேட்டு சாத்தங்குடி பிட்.2 கிராம நிர்வாக அலுவலகத்தில் மனு தாக்கல் செய்ததாக மனுதாரர் தரப்பில், மனுதாரர் பொதுத் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் சாத்தங்குடி பிட்.2 கிராம நிர்வாக அலுவலர் அவர்களுக்கு அனுப்பட்ட மனு இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

8. அசல் வழக்கானது பாகப்பிரிவினை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி மனுதாரர்/வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில், மேற்படி தாவா சொத்தானது மனுதாரரான செல்வக்குமாரின் தாத்தாவிற்கு பாத்தியப்பட்டது என்பதற்கான ஆவணத்தினை தாக்கல் செய்தால் மட்டுமே மேற்படி பரிகாரத்தை பெற இயலும் என்பதாலும், மேற்படி வழக்கினை நிரூபணம் செய்வதற்காகவும், தாவா சொத்துகள் சம்பந்தமான வருவாய் ஆவணங்களான அ.பதிவேடு, சிட்டா, பட்டா, அடங்கல்கணக்கு மற்றும் புல வரைபடம் ஆகியவற்றை திருமங்கலம் வட்டாட்சியர் சான்றொப்பம் பெற்று சாத்துக்கடி பிட்–2 கிராமத்தின் கிராம நிர்வாக அலுவலர் அவர்கள் மூலம் சமூகம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்வது அவசியமானது என்று கூறும் மனுதாரர் தரப்பு வாதத்தை கருத்தில் கொண்டும், மேலும், மனுவில் கண்ட ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்வது வழக்கு தரப்பினர்களுக்கு இடையே உள்ள பிரச்சனைக்கு தீர்வாக அமையுமே

தவிர தரப்பினர்களுக்கு எவ்வித பாதகம் ஏற்படாது என்பதை கருத்தில்கொண்டும், இம்மனுவானது நீதியின் நலன்பொருட்டு சட்டப்படியானது மற்றும் அனுமதிக்கத்தக்கது என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

**முடிவாக,** மனுதாரர்/வாதியின் இம்மனுவானது அனுமதித்து இந்நீதிமன்றத்தால் உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இவ்வுத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு இந்த திறந்த நீதிமன்ற அவையில் 2026ம் ஆண்டு ஜூலை மாதம் 08ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2026.07.08 17:19:56 +0530

முதன்மை மாவட்ட உரிமையில் நீதிபதி,
திருமங்கலம்.

**<u>இணைப்பு:</u>**

சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் இருதரப்பிலும் தாக்கல் இல்லை.

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2026.07.08 17:20:05 +0530

முதன்மை மாவட்ட உரிமையில் நீதிபதி,
திருமங்கலம்.

இடைநிலை மனு எண். 3 /2026
அசல் வழக்கு எண்.199/2023
வரைவு/செவ்வை உத்தரவு
நாள் : 08.07.2026